2002 மே 9]

திரு. வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை மரம் என்பது திடீரென்று ஒரு நாளில் உற்பத்தி செய்யக்கூடிய பயிரல்ல. பல்லாண்டு காலமாக பாடுபட்டுத்தான் விவசாயி அந்த தென்னை மரங்களை உருவாக்குகிறான். ஆகவே, எப்பாடுபட்டாகிலும்-சென்ற ஆண்டு இருந்த அதே நீர்மட்டம், அதே அளவு நீர்மட்டம் இப்போதும் ஆழியாறு அணையிலே இருக்கின்றது. ஆகவே, ஆழியாறு அணையைப் பொறுத்தவரையிலே 17 ஆம் தேதியோடு நீர்ப்பாசனம் முடிவதாலே அந்தப் படுகையைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, ஆழியாறு படுகையைச் சேர்ந்த விவசாயிகளுக்கு உயிர்த் தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டு, கடந்த நான்கு நாட்களாக மலையிலே நீர்ப்பிடிப்புப் பகுதியிலே catchment area-விலே ஓரளவுக்கு மழை பெய்திருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே, திருமூர்த்தி அணையிலும் நீர்மட்டத்தைப் படிப்படியாக உயர்த்தி அந்த வழியாகவும் விவசாயிகளுடைய தென்னை மரங்களைக் காப்பதற்கான முயற்சிகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆசியோடு ஈடுபட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து அமர்கின்றேன்.

(ஆ) கோவில்பட்டி, இந்திரா நகர் பகுதியில் சில தீப்பெட்டித் தொழிற்சாலைகள் எரிந்து சேதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கோவில்பட்டி, இந்திரா நகர் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டு ஐந்து தீப்பெட்டித் தொழிற்சாலைகள் எரிந்து நாசமாகியுள்ளது குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[2002 மே 9

அறிக்கை

கோவில்பட்டி, இந்திரா நகர் பகுதியில் அமைந்துள்ள லட்சுமி மேட்ச் ஒர்க்ஸ் என்ற தொழிற்சாலையில் 22-04-2002 அன்று அதிகாலை 3-00 மணியளவில் தீப்பற்றிக் கொண்டுள்ளது. அச்சமயம் அங்கு தீப்பெட்டி பண்டல்களும், குச்சி மூட்டைகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததாகவும், இதனால் அருகில் உள்ள இதர மூன்று சிறு தொழிற்சாலைகளுக்கும் தீ பரவி அங்கிருந்த தீப்பெட்டி மற்றும் குச்சி மூட்டைகளும் சேர்ந்து எரிந்து மேற்கண்ட சிறு தொழிற்சாலைகள் யாவும் சாம்பலாயின எனத் தெரிய வருகிறது. அருகிலுள்ள மற்றுமொரு தொழிற்சாலையில் சேதம் ஏதும் ஏற்படாமல் புகை மட்டும் பரவியுள்ளது. இத் தீவிபத்திற்கான முக்கிய காரணம் மின்சார கசிவுதான் எனத் தெரியவருகிறது. இந்தத் தீ விபத்து நடப்பதற்கு முன்பாக ஒரு வாரத்தில் இத்தொழிற்சாலைகளில் வேலை ஏதும் நடைபெறவில்லை. தொழிலாளர்கள் எவரும் காயமடையவில்லை. உயிரிழப்பும் ஏதுமில்லை. சுமார் 5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்துள்ளன. இதற்கு இத்தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள்மீது காரணம் காட்டும் அறிக்கை வழங்கப்படவுள்ளது.

மேற்படி தீ விபத்தினால் அந்த வட்டார பொதுமக்கள் மத்தியிலும், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மத்தியிலும் எந்தவிதமான பதட்டமோ, கவலையோ ஏதும் இல்லை. தற்போது இப்பகுதியில் அமைதி நிலவுகிறது.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி தொழிற்சாலையிலே ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக — ஏற்கெனவே கடந்த மாதம் 22 ஆம் தேதி இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. அதற்குப் பின்னால், அந்தத் தொழிற்சாலையிலே வேலை செய்துவந்த தொழிலாளர்கள் வேலைக்குப் போகவில்லை. வேலையில்லாத ஒரு சூழ்நிலை அங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றது. காரணம், அந்தத் தொழிற்சாலை பூராவும், முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதால் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகி, அந்தத் தொழிற்சாலையைக் கட்டுவதற்கும், மீண்டும் வேலையை ஆரம்பிப்பதற்குமான சூழ்நிலை இல்லாமல் அந்த நிர்வாகத்தை நடத்தி வந்த, தொழிற்சாலையை நடத்தி வந்த அந்த நிர்வாகி இல்லாத ஒரு காரணத்தால் இப்படி ஒரு நிலை நீடிக்கின்றது எனத் தோன்றுகிறது. எனவே இந்தத் தொழிற்சாலையில் மீண்டும் வேலை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அதை மீண்டும் கட்டுவதற்கு

குறைந்தபட்சம் 5 இலட்சம் ரூபாயாவது கொடுத்து உதவினால்தான் அந்தத் தொழிலாளர்களை நாம் பாதுகாக்க முடியும். அந்த வகையிலே அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வ.து. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி, இந்திரா நகர் பகுதிகளில் அமைந்துள்ள Lakshmi Match Works என்ற தொழிற்சாலையில் 22-4-2002 அன்று காலை 3 மணியளவில் தீப்பற்றிக் கொண்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அமைச்சர் அவர்களே, திரு. மணி, மறுபடியும் அந்தத் தொழிற்சாலை இயங்க வேண்டுமென்று சொன்னால், நீங்கள் அரசாங்கத்திலிருந்து பணம் கொடுப்பீர்களா என்று கேட்கிறார்.

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்: யோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையிலே சட்டப்படி பாதுகாக்கப்பட வேண்டிய safety measures கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றதா? அவை சரியான முறையிலே வைக்கப்பட்டிருந்ததா? Factory Inspector இதை காலாகாலத்திலே inspect பண்ணியிருக்கிறாரா? அவர் கடைசியாக inspect பண்ணி என்ன அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலை பற்றி, கோவில்பட்டியில் 808 தீப்பெட்டி தொழிற்சாலைகளும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அமைச்சர் அவர்களே, அதாவது பாதுகாப்பு ஏற்பாடுகள் அங்கே செய்யப்பட்டிருந்ததா, அந்த Factorty Inspector போய் அதைப் பார்த்தாரா என்று கேட்கிறார் ஹேமச்சந்திரன். அதுபற்றி ஏதாவது தகவல் இருந்தால் சொல்லுங்கள். இல்லையென்றால் தகவல் கேட்டு சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்: உடனடியாக எங்களுடைய அதிகாரிகள் அந்த இடத்திற்குச் சென்று மேல் நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.